Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஞு வைகாசி மீ 27 உ திங்கட்கிழமை (10-06-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 188

# சர்வதேச மன்னிப்பு சபையின் பிரதிநிதிகளுக்கு பயமுறுத்தல்!

## கிழக்கு விஜயம் திடீர் ஒத்திவைப்பு!

லண்டன், ஜூன் 10

ஸ்ரீலங்கா வந்திருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள் குழுவுக்கு கொழும்பில் வைத்து பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக பி. பி. ஸி. நேற்று அறிவித்தது.

இதற்கிடையில் மன்னிப்புச் சபை பிரதிநிதிகள் குழு நேற்று மேற்கொள்ளவிருந்த—சர்ச்சைக்குரிய—கிழக்கு மாகாண விஜயத்தை திடீரென ஒத்திவைத்தது.

கடந்த முதலாம் திகதி இரவு சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள் குழுவைச் சேர்ந்த திரு. டேர்க் அவன்ஸ் தலைமையிலான இருபிரதிநிதிகள் குழு கொழும்பு வந்து சேர்ந்தது.

கடந்த வாரத்தில் மற்றொரு பிரதிநிதி கொழும்பு வந்து இந்தக் குழுவுடன் சேர்ந்துகொண்டார்.

குழுவினர் கொழும்பு வந்த நாள் முதல் அவர்களுக்கு தொடர்ந்து எச்சரிக்கை, பயமுறுத்தல் விடுக்கப்பட்டுவந்ததாக பி. பி. ஸி அறிவித்தது.

அத்தகைய பயமுறுத்தல் யாரால் விடுக்கப்பட்டது என்பது பற்றிய விபரங்களை பி.பி ஸி. வெளியிடவில்லை.

இதேசமயம் —

கிழக்கு மாகாணத்துக்கு நேற்று மேற்கொள்ளவிருந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலை கல்லாறில் 6 படையினர் மரணம்!

### ஆயுதங்களும் புலிகளால் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

திருகோணமலை மாவட்டம் கொட்டடி ஸ்ரீலங்கா முகாமில் இருந்து நேற்றுக் காலை 10 மணியளவில் வெளியேறி, முன்னேறமுயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஆறு படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். புலிகளால் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளுடன் சமரசம் செய்ய அரசு சமாதானத் திட்டம்

### ரணில் கூறியதாகத் தகவல்

கொழும்பு, ஜூன் 10

விடுதலைப் புலிகளுடன் சமாதானம் செய்து கொள்ளும் வகையில் புதிய சமாதானத் திட்டம் ஒன்றை முன்வைக்க அரசு திட்டமிட்டிருக்கிறது.

—இவ்வாறு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்திருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இந்தச் சமாதானத் திட்டத்தில் என்ன என்ன அம்சங்கள் அடங்கியிருக்கும் என்பதை அரசு இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் அமைச்சர் சொன்னார்.

அனைத்து அரசியல் கட்சி மாநாட்டில் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண எடுக்கப்படும் முடிவை செயற்படுத்த அரசு விருப்பம் கொண்டுள்ளது என்றும்—

[4ஆம் பக்கம் பார்க்க]

## அடுத்த மாதம் தொடக்கம் பாடசாலைகள் இரு நேரம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். மாவட்ட பாடசாலைகளை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இரு நேரமாக இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஜூன் மாதம் ஆரம்பமான இராணுவ நடவடிக்கைகளை அடுத்து பாடசாலைகள் இரு நேரமாக இயங்குவது தடைப்பட்டது தெரிந்ததே.

[உ-3]

## பஞ்சாப் மாநில தேர்தல் ஒத்திவைக்கப்படலாம்!

எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பஞ்சாப் மாநில சட்டசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை ஒரு திகதிக்கு ஒத்தி வைப்பது குறித்துதேர்தல் ஆணைக்குழுஆலோசித்து வருகிறது

பஞ்சாப்மாநிலத்தில் போட்டியிடும் வேட்பாளர்களில் 21 பேர் இதுவரை சீக்கிய தீவிரவாதிகளால் சுட்டுக்

[4ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



மன்னிப்புச்சபையை வந்தாறுமூலையிலே வரவேற்கிறதுக்கு படையினர் தயார் எண்டு சொல்லாமற்சொல்லு கினம் போலை......!

## கிழக்கு மோதலில் 4 படையினர்பலி!

கொழும்பு, ஜூன் 10

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலைப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே ஏற்பட்ட சண்டையில் நான்கு படையினர் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ-2]

## சாவகச்சேரி முத்தமிழ் விழாவில் உணர்ச்சி பொங்க மக்கள் கடல்

— உதயன் சிறப்புச் செய்தியாளர்:- ஐ. கிருஷ்ணன் —

சாவகச்சேரியில் நேற்று ஆரம்பமான முத்தமிழ் விழாவில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உணர்ச்சி பொங்க, ஆர்வத்துடனும், மனப்பூரிப்புடனும், பங்குபற்றினர்.

சிவன்கோயிலுக்கு அருகே உள்ள தென்மராட்சி மாவீரர் மைதானம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது.

மைதானத்தில் இடம்பிடிக்க முடியாதவர்கள் வெளியே வீதிகளில் நின்று விழாக்களை கண்டும் கேட்டும் ரசித்தனர்.

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் முத்தமிழ் விழா இரண்டாம் கட்ட நிகழ்ச்சியை ஒட்டி சாவகச்சேரி நகரப் பகுதி வண்ணமிகு அலங்கார தோரணைகளுடன் அழகு பொலியக் காணப்பட்டது.

நிகழ்ச்சிகள் நேற்று மாலை 6. 15 மணிக்கு ஆரம்பமாகின. தென்மராட்சி இராணுவப் பொறுப்பாளர் திரு.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வந்தாறுமூலை படையினரால் ஏழு தமிழர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், ஜூன் 10

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலையில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்கா படையினர் அம்பலத்தடி கிராமத்தில் ஏழு தமிழர்களை சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் அந்த கிராமத்தை சுற்றிவளைத்த படையினர், ஏழு தமிழர்களை சுட்டுக் கொன்றதுடன், தமிழருக்கு சொந்தமான இரு கடைகளையும், 4 வீடுகளையும் உடைத்து, கொள்ளையிட்டு தீவைத்து கொளுத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காலையில் படையினர் ஆசிரியர் ஒருவரையும், அவரது சகோதரனையும் வீட்டில் இருந்து இழுத்துச் சென்று சுட்டுக் கொன்றதாகவும்—

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அரசு - புலிகள் யுத்தம் தொடங்கி ஒரு வருடம் இன்றுடன் முடிகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 10

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் மீண்டும் யுத்தம் மூண்டு இன்றுடன் ஒரு வருடம் முடிவடைகிறது. நாளை இரண்டாவது வருடம் ஆரம்பமாகிறது.

முஸ்லிம் பிரஜை ஒருவர், தாம் இன்னொரு பிரஜை ஒருவரால் தாக்கப்பட்டது குறித்து முறைப்பாடு பதிவு செய்வதற்குக் கடந்த வருடம் ஜூன் பத்தாம் திகதி மட்டக்களப்புப் பொலீஸ் நிலையத்துக்குச் சென்றிருந்தார்.

அவரின் முறைப்பாட்டைப் பதிவதற்கு மட்டக்களப்புப் பொலீஸார் மறுத்துவிட்டனர். அது குறித்து அவர் விடுதலைப் புலிகளிடம் முறைப்பாடு செய்தார்.

அது குறித்து விசாரிப்பதற்கு அன்று மாலையில் சென்ற விடுதலைப் புலிகள் குழு மீது மட்டக்களப்புப் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அதுவே யுத்தத்தின் ஆரம்பமாகியது!

அதனைத் தொடர்ந்து அன்று [10-6-90] மாலை மட்டக்களப்பு அம்பாறை

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

உயர்ந்த இனப் புறாக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வ. தர்மலிங்கம் [அப்பா] மடத்தடி சந்தி தாணை, சாவகச்சேரி. [17096]

### தேவை

சோபா, குக்கன் தேவை. தொடர்பு கொள்ளவும் "அன்னா பாலி". இணுவில். [இ/0043]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைச் சந்தியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்பாக] தினசரி பகல் 9-00 மணி தொடக்கம் 3-00 மணிவரை சந்திக்கலாம்; வியாழன் விடுமுறை. [4128]

### வைத்திய நிலையம்

வேலணையிலும், புளியங்கூடல் சந்தி சரவணை வீதியிலும் இயங்கி வந்த எமது வைத்திய நிலையம் தற்காலிகமாக கஸ்தூரியார் வீதி, 140 ஆம் [320] இலக்க கட்டடத்தில் இயங்கி வருகின்றது. டாக்டர் கந்தையா நவரத்தினம் 40, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை. [17074]

### பயிற்சி வகுப்புகள்

கேக் ஐசிங், சமையலை புதிய பயிற்சி வகுப்புகள் 15-6-91 சனிக்கிழமை பி.ப. 2-00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. Yogi Home Science Academy, 71B, நாவலர் வீதி, [Off Kachcheri Nallur Road] நல்லூர், யாழ்ப்பாணம். [17073]

### மீட்டல் பௌதிகம்

1991 ஆகஸ்ட் மாதம் A/L விஞ்ஞானம் எடுக்கும் மாணவர்கள் மீட்டல் செய்வதற்கு இது ஒரு சிறந்த புத்தகம். சகல புத்தகசாலைகளிலும் பெறலாம். பிரதிக்கு முந்துங்கள் ஆ. கருணாகரர் வைமன் றோட், யாழ்ப்பாணம். [17092]

### முள்முடி மன்னர்கள்

மீரா வெளியீடு "ஒற்றைக் காசம்" விடாமல் கரைந்து கொண்டிருந்தது என்று ஆரம்பித்து அடக்கு முறைக்கு எதிராக கிளர்ந்தெழுவோம் தமிழ் ஈழத் தாயகத்தின் விடுதலைக்காக போராடுவோம் என்பது வரை யதார்த்தமாகவே எழுதியிருக்கிறார் கிதம்பர திருச்செந்திநாதன். [17081]

### ஜோதிடம்

விவாகத்தடை, கல்வித்தடை, தொழில்த்தடை, கடன் தொல்லை மற்றும் எல்லா விதமான வாழ்க்கைப் பிரச்சினைகளும் தீர்க்க ஆலோசனைகள் வழங்கப்படும். ஜாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெற உத்தரவாதம். ஸ்ரீ மானவ விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, [அரசடிச் சந்தி] நல்லூர். [17070]

### சிரமதானம்

வடமராட்சிப் பகுதியில் நடைபெறவுள்ள முத்தமிழ் விழாவின் முன்னேற்பாடாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், தெங்கு - பனம் பொருள் உற்பத்திச் சங்கங்களும் சகல பிரதான வீதிகளையும் சிரமதானம் மூலம் சுத்திகரித்துள்ளன. [இ-118]

---

## கண்ணீர் அஞ்சலி

### டாக்டர் J. P. C. பிலிப்ஸ் J. P.

[தமிழீழம்]

31-05-1991 இல் சென்னையில் காலமான தலை சிறந்த பொது நலச் சேவையாளன் வைத்தியக் கலாநிதி J. P. C. பிலிப்ஸ் அவர்களை இழந்ததையிட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

திருமறைக்கலாமன்றம்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[சி 0098]

---

## A/L கணக்கியல் மாணவர்களுக்கு

1. கம்பனிக் கணக்குகள்
2. கம்பனி முடிவுக் கணக்குகளும், பகுப்பாய்வும்

விலை 30/-

ஆசிரியர்: க. தங்கராஜா
B. Sc (P. F. T.) Spl Dip-in-ED

கிடைக்குமிடம்: யாழ் நகர், நல்லூர் புத்தகசாலைகள்

தொகையாக வாங்குவோர்க்கு விசேட கழிவு உண்டு.

[4135]

---

## 45 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டியும்



மலர்வு:
30 - 1 - 1972

உதிர்வு:
27 - 4 - 1991

### சரவணை நந்தகோபன்

உமது தம்பி 'ஞானவேல்' தனை இழந்து ஐந்து ஆண்டுகளாக தவிக்கும் எமக்கு, உம்மையும் இழந்து பரிதவிக்கும் நிலைமைதனை எப்படி நாம் சகிப்பது உம்மை நாம் தேடுகிறோம் எம்விழிகளுக்கோ எட்டவில்லை. மழலை பேசும் உமதருமை மருமகனார் உம்வரவை தேடுகிறார். பாவிகள் குண்டு உமதுயிரை பறித்ததை அவரறியார். நாம் என்செய்வோம் செய்வதறியாது நிற்கிறோம். ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் உம் அன்பால் அடிபட்டவர்கள்.


பாசமிகு அம்மா, ஐயா, அண்ணா, பரிவுமிகு அக்காமார், அன்பு காட்டும் அத்தான், மழலை பேசும் மருமகன். உற்றார், உறவினர், நண்பர்கள்

புத்தூர்,
புத்தூர் வடக்கு.

[17075]

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### வைத்தியநாதர் செல்லத்துரை

அன்னை மடியில்: 22 - 04 - 1924
ஆண்டவன் அடியில்: 27 - 04 - 1991

எங்கள் குடும்ப ஒளிவிளக்கே!
நாட்கள் நாற்பத்தைந்து மறைந்தாலும்
அன்பே உருவான ஐயாவே
தூண்டாமணிச் செஞ்சுடரே துரையே
எங்கள் ஒளிவிளக்கே
கூண்டுக்கிளிபோல் பறந்தீரே எம்மை எல்லாம்
விட்டு விட்டுச் சென்றீரே
பிறந்து வளர்ந்த நாள்முதலாய் உங்களை
விட்டுப் பிரியாமல் இருந்தோமே
நீங்கள் பிரிவதற்கோ எம்மை எல்லாம்
வழி அனுப்பி வைத்தீர்கள்
பறந்தே உலகில் அலைந்தாலும் எங்கள்
பதியைக் காண முடியாதே
மறந்தே போவோம் எங்கள் தனிச் சொத்தை
மாணிக்கமே உங்களை மறப்போமா?

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல வைரவப் பெருமானின் திருவடியைப் போற்றி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

"நவயோகம்"
வேலணை - 5

[17069]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி சோமசுந்தரம் குணவதி

தோற்றம்: 09 - 01 - 1925
இறைபதம்: 12 - 05 - 1991

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு என்றும் எங்களை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

11 - 06 - 91 செவ்வாய்க்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'சாந்தி அகம்'
உடுப்பிட்டி.

[17068]

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
31 - 10 - 1932

உதிர்வு:
10 - 06 - 1989

திருமதி

### றோசலீன் அந்தோனிப்பிள்ளை

எங்கள் அன்பு அன்னையே
அன்பு செலுத்தி அரவணைத்து
எம்மை தாலாட்டி சீராட்டி
என்றும் எம்மைக் குழந்தையாக்கி
எம்முடன் இருந்தீர்கள்
இன்றுதான் எங்கு ஓடி மறைந்தீர்கள்?

அன்புத்தாயே நீங்கள் எங்களை தனியே விட்டு இன்றுடன் ஆண்டு இரண்டு பூர்த்தியானாலும் எம் துயரோ ஓயவில்லை. உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'றோஸ் மஹால்'
அச்சுவேலி.

[4126]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒரு வருடம் முடிந்தது!

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு, இடம் பெயர்ந்து வாழ்ந்த கர்ப்பிணி ஒருவர் சத்துணவுப் பற்றாக்குறையால், பிரசவத்தின் பின் மரணமானார் என்று அறிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் கடந்த ஒரு வருட காலமாக சத்துணவு இல்லாமலும், உணவு இல்லாமல் பட்டினி கிடந்தும், உரிய நேரத்தில் சிகிச்சை பெற மருந்து இல்லாமலும் ஆகக் குறைந்தது நூற்றுக் கணக்கானோர் இறந்திருப்பர்.

இவை தவிர குண்டுத் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள், ஹெலித்தாக்குதல்களுக்கு இரையாகி மரணமானவர்கள் ஆயிரக்கணக்கானோர். அவற்றால் ஊனமுற்று வாழ்க்கை இருண்டு போனவர்கள் மேலும் பல்லாயிரவர். விசாரணை எதுவும் இல்லாமல் முதலில் கைது செய்யப்பட்டு, பின்னர் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டவர்கள் மேலும் ஆயிரமாயிரம் பேர். அகதி முகாம்களில் இருந்தும், வீடுகளில் இருந்தும் அழைத்துச் செல்லப்பட்டு மர்மக் கொலைக்கு ஆளானவர்கள் மேலும் ஆயிரக்கணக்கானோர்.

இராணுவ நடவடிக்கைகளால் உயிரிழக்காவிடினும், ஏதோ ஒரு வகையில் உடல் பாதிப்புற்றவர்களும், உளவளம் பாதிக்கப்பட்டவர்களும் வடக்கு- கிழக்கில் லட்சக் கணக்கானோர்.

இவர்களின் இன்னல்கள், கஷ்டங்கள், துன்பங்கள் வெளிச்சத்துக்கு வராமல் பதிவுபடாமலே, கணக்கெடுக்கப்படாமலே உள்ளன.

தனது நாட்டு மக்கள் என்று கூறிக்கொண்டு—

அவர்கள் மீது பொருளாதாரத் தடை விதித்து—

குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்திக் கொன்றும்—

அவர்களின் விருப்பத்துக்கு மாறாக அவர்களது மண்ணில் இராணுவத்தை நிலைகொள்ளச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு மக்களையே கொன்றும்—

சர்வதேச நடைமுறைகளையும், இணங்கிக் கொண்ட சட்ட திட்டங்களையும் மீறி கடந்த ஒரு வருடமாக மிகப் பகிரங்கமாகத் தமிழ்மக்களை வாட்டி வதைத்தும், கொன்று குவித்தும் வருகிறது கொழும்பு அரசாங்கம்.

கடந்த ஒரு வருட காலமாக தொடர்ச்சியாக நடக்கும் இத்தனை அநியாயங்களையும், அநீதிகளையும் அறிந்தும், தமிழர்களைக் கொடுமைப் படுத்தினால் உறவை முறிப்போம் என்றோ உதவியை நிறுத்துவோம் என்றோ எந்த ஓர் உலக நாடும் உரிய அளவில், உரிய விதத்தில் இன்னும் நெருக்குதல் கொடுக்கவில்லை!

இராணுவ அட்டூழியங்கள் ஒரு புறமிருக்க, மனிதாபிமானம் இல்லாத தனி மனித உரிமைகளைக் கெடுக்கும் செயல்கள் நடக்கின்றன என்பதைக் கூட வெளி உலகம் புரிந்து கொள்ளவில்லை.

இலங்கை அரசு ஈழத் தமிழர்களுக்கு எதிராக யுத்தம் பிரகடனம் செய்து இன்றுடன் ஒரு வருடம் முடிவடைகிறது. நாளை பதினொராம் திகதி இரண்டாவது ஆண்டு பிறக்கிறது.

மனித சமூகத்துக்கே ஒவ்வாத விதத்தில் வாழ்வு உரிமைகளைப் பறிக்கும், கெடுக்கும் கொடுமையை அரசு இன்னும் எத்தனை காலத்துக்குத் தொடரப் போகிறது? ஒன்றும் தெரியாத சோணகிரி போல சர்வதேச சமூகமும் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கப் போகிறதா?

## பயணிகள் கப்பல் சேவை நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ் - மாவட்டத்தில் இருந்து கொழும்பு செல்லும் மக்கள் அனுபவிக்கும் கஷ்டத்தைப் போக்க பயணிகள் கப்பல் சேவை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும்.

யாழ் - செயலகத்தில் நடைபெற்ற திணைக்களத் தலைவர்கள் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய நேற்று முன்தினம் செயலகத்தில் அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திலேயே பயணிகள் கப்பல் சேவை நடத்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

உணவு, வங்கி மற்றும் அத்தியாவசிய சேவைகள் குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டது. [இ-8]

## பளை பிறப்பு-இறப்பு பதிவு; மாதாந்த விசேஷ ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 10

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த மக்களின் பிறப்பு, இறப்பு, விவாகம் தொடர்பான அலுவல்களை கவனிக்க விசேஷ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கென கிளிநொச்சி காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் மாதத்தில் இரண்டாவது புதன்கிழமைகளில் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடமைக்கு சமுகமளிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி [புதன்] முதல் அவர் அங்கு கடமைக்கு சமுகமளிப்பார். [இ-5]

## நெல்லியடியில் ஏற்பாடுகள் பூர்த்தி:

## நாளை முத்தமிழ் விழா

பருத்தித்துறை, ஜூன் 10

வடமராட்சியில் முத்தமிழ் விழா ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டன.

வடமராட்சியிலுள்ள நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் முத்தமிழ் விழா நாளை 11ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை மிகக்கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் உள்ள சகல வீதிகளிலும் தோரணங்களும், வண்ணச் சரங்களும் தொங்கவிடப்பட்டுள்ளன.

பிரதான சந்திகள் தோறும் போராட்ட வரலாறுகளைப் பிரதிபலிக்கும் வளைவுகள் நடப்பட்டுள்ளன. வல்லை வெளிச் சந்தியிலிருந்து ஆரம்பிக்கும் வடமராட்சிப் பகுதி, முத்தமிழ் விழாவை முன்னிட்டு இந்திரவிழாக்கோலம் பூண்டுள்ளது. எங்கும் "இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்ற வாக்கியங்கள் எழுதப்பட்டுக் காணப்படுகின்றன. [இ-118]

## ★ முத்தமிழ் விழா ★
## 5ஆம் நாள் நிகழ்ச்சிகள்
## (10-06-1991)

இடம்: சாவகச்சேரி சிவன் கோவில் அருகாமையில் அமைந்துள்ள "மாவீரர் கலை அரங்கம்"

நேரம்: பிற்பகல் 5-30 மணி

### நிகழ்ச்சி விவரம்

★ மங்கள இசை:

நாதஸ்வரம்: திரு கே. எம். பஞ்சாபிகேசன்
திரு எம். பி. நாகேந்திரன்

தவில்: திரு. பி. முருகதாஸ்
திரு. ஆர். எஸ். ராமதாஸ்

★ தமிழீழ விடுதலைப்புலிகளின் - திறப்புரை:

★ சிறப்புரை: திரு. க. சிவராமலிங்கம்

★ 'லய மாதுரி' தாளவாத்ய ப்ருந்தா:

★ இசைக் கச்சேரி:

திரு. வி. கே. நடராஜா — பாட்டு
திரு கே. சேசமூர்த்தி — வயலின்
செல்வன் கே. கண்ணதாசன் — மிருதங்கம்
திரு இரா. சிவராமன் — கஞ்சிரா

★ எதிர் நீச்சல் — நாட்டிய நாடகம்

★ கிளிநொச்சி கலை, பண்பாட்டு அவையினரின் 'வெற்றிக்களத்தில் வீரவேங்கை' நாடகம்

## புகழுடல்கள் அஞ்சலிக்கு

குருநகர் ஜூன் 10

கடந்த 6ஆம் திகதி மன்னாரில் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை ரேணு [பீச்றோட், யாழ்ப்பாணம்] வீரவேங்கை பவான் [அளவெட்டி] ஆகியோரின் புகழுடல்கள் நேற்று முன்தினம் 12 மணிமுதல் 1 மணிவரை குருநகர் சென். ஜேம்ஸ் பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. [இ 51-15]

# தமிழீழ தேசிய விருது பெறும் மாமனிதர்கள்

இந்த ஆண்டு எட்டுப் பேர் தமிழீழ தேசிய விருது வழங்கப்பட்டு விடுதலைப் புலிகளினால் கௌரவிக்கப்பட உள்ளனர். அவர்களில் மூவர் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மிகுதி நாளை தொடர்ந்து வெளிவரும்.

### க. சிவானந்தசுந்தரம்
#### மக்கள் பணி

யாழ். மாவட்டம் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட மறைந்த க. சிவானந்தசுந்தரம் தமிழீழ விடுதலைக்காக தன் வாழ்நாளின் இறுதிவரை அஞ்சாத அரிமாவாகச் செயற்பட்டு வீரமரணத்தைத் தழுவிக்கொண்டவர்.

1956 இல் சிங்கள ஆட்சியாளரின் மொழித் திணிப்பையும் அடக்குமுறைகளையும் எதிர்த்து தமிழ் அரச பணியாளர்களுடன் சேர்ந்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தை உருவாக்கி அதன் முதல் தலைவராகச் செயற்பட்ட சிவானந்தசுந்தரம் தமிழ் சமூகத்திற்காக ஆற்றிய அரும்பணிகள் அளப்பரியன.

1961 இல் தமிழ்மக்கள் எழுச்சிபெற்று சிங்கள ஆட்சியாளருக்கு எதிராக நடத்திய அறப்போரின்போது தமிழரசுக்கட்சியின் பொறுப்புச் [நிர்வாக] செயலாளராக இருந்து அப்போராட்டம் வெற்றிகரமாக நடப்பதற்கு பெரும் பணியாற்றியவர்.

பின்னர் தமிழரசுக்கட்சியுடனான கருத்து வேறுபாடுகளினால் அதிலிருந்து விலகிய சிவானந்தசுந்தரம் விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வீறுடன் நடத்திய வேளையில், அரசியல் நடத்தியோர் மக்களுக்கு முகம் கொடுக்க முடியாது ஓடி ஒளிந்த வேளையில் தமிழீழ மக்கள் மன்றத்தை அமைத்து தமிழ் மக்களுக்கு நற்பணி ஆற்றியவர்.

இந்திய அரசுப்படைகளும் அதிகாரிகளும் தமிழீழத்தில் மேற்கொண்ட தமிழின விரோதப் போக்கை எதிர்த்துக் குரல் கொடுத்த சிவானந்தசுந்தரம், இந்தியப் படையைத் திருப்பி அழையுங்கள் என்று இந்திய அதிகாரிகளின் முன்னர் வீரமுழக்கமிட்டவர்.

அதனாலேயே இந்திய அதிகாரிகளின் கோபத்துக்குள்ளாகி அவர்களின் தூண்டுதலின் பேரால் 21-10-88 அன்று இனத்துரோகிகளினால் படுகொலை செய்யப்பட்டு அவர் மடிந்தார். என்றாலும் அவரின் விடுதலை முழக்கம் தமிழர் இதயங்களில் என்றும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

### ஆ. இராசரத்தினம்
#### போராட்ட பங்களிப்பு

யாழ். மாவட்டம் மட்டுவிலைச் சேர்ந்த மறைந்த ஆ. இராசரத்தினம் தமிழீழம் விடுதலை பெறவேண்டும், அதற்காகப் போராட ஓர் இயக்கம் காண வேண்டும் என இலட்சியக் கனவு கண்டவர். அவரது கனவுகள் நனவாகும் காலத்தில் அதைப் பார்க்க அவர் இன்று எம்முடன் இல்லை.

1956 இல் சிங்கள அரசின் மொழித்திணிப்பினால் கொதித்தெழுந்த இராசரத்தினம் தமிழ்த் தொழிலாளர் [illegible] வேளையில் தமிழர்களுக்கெனத் தனித் தொழிற்சங்கம் வேண்டுமெனச் சிந்தித்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் உருவாக அயராது உழைத்து அதன் தலைவராகவும் செயற்பட்டார்.

தமிழ் மக்கள் உரிமைகளை அமைதிவழிப் போராட்டங்களின் மூலம் சிங்கள ஆட்சியாளரிடமிருந்து பெறமுடியாது என்பதை நன்குணர்ந்த அவரின் சிந்தனை ஆயுதப் போராட்டத்தின் பக்கம் திரும்பியது.

1973 இல் யாழ். பண்ணைப் பாலத்தகர்ப்பு முயற்சி தொடர்பாக பொலிஸாரினால் தேடப்பட்டு தலைமறைவாகித் தமிழகம் சென்ற இராசரத்தினம் எல்லாளன் என்ற பெயரில் பத்திரிகைகளுக்கு ஆக்கங்களை அளித்தார். மாணவர் பேரவை [illegible] தமிழீழ விடுதலைக்கு புது இயக்கம் காணப் புறப்பட்ட பிரபாகரனை தமிழகத்தில் சந்தித்து அவருக்கு உறுதுணையாகச் செயற்பட்டார்.

உலக விடுதலைப்போராட்ட வரலாறுகள், இராணுவ அமைப்புக்குத் தேவையான செய்திகளை ஆங்கில நூல்களிலிருந்து மொழி பெயர்த்துக் கொடுத்ததுடன், தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட 'புதிய தமிழ்ப் புலிகள்' இயக்கத்துக்கான பெயர் உருவாவதற்கு உதவினராக இருந்தார். அந்த அளவுக்கு அவர் விடுதலையை விரும்பிச் செயற்பட்டவர்.

இன்று விருட்சமாக வளர்ந்துவிட்ட விடுதலை இயக்கத்தின் அடித்தள அமைவில் அவரின் அரும்பணியும் இருந்தது. ஆஸ்மா நோயுடனும், பட்டினியுடனும் ஒரு புறம் போராடிக்கொண்டே தமிழீழ விடிவுக்காகப் பணியாற்றி உயிர்நீத்த இராசரத்தினம் தமிழீழத்தின் நேதாஜி என தமிழ்மக்களால் போற்றப்படுகின்றார்.

### பொ. அருணாசலம்
#### உயிரை மதிக்காத தீரச்செயல்

வவுனியா மாவட்டம் பாலமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொ. அருணாசலம் பண்டைத் தமிழரின் வீரம் வீழ்ந்து படவில்லை என்பதை வெளிப்படுத்தி வீரமரணத்தைத் தழுவிக் கொண்டவர்.

கடந்த நவம்பரில் மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் வெற்றி கொள்ளப்பட்ட வேளையில், ஆயுதத்துடன் தப்பியோடிய சிங்களச் சிப்பாய் ஒருவன், தான் வவுனியாவுக்குத் தப்பிச் செல்ல வழிகாட்டுமாறு துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய போது இந்த பொ. அருணாசலம் என்னும் 54 வயதுடைய வன்னிக்கிழவர் அந்தச் சிங்களச் சிப்பாயை சாதுரியமாக மடக்கிச் சண்டையிட்டார்.

ஆயுதத்தை இழந்த சிங்களச் சிப்பாய் கைக்குண்டை எடுத்த போதும் அஞ்சாது அருணாசலம் அவனோடு போராடிய போது கைக்குண்டு வெடித்து அந்தச் சிப்பாய் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டான்.

விழுப்புண்ணேற்ற அருணாசலம் யாழ். மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இவரின் பெயர் என்றும் நிலைத்திருக்கும்.

[தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக தேர்தலையொட்டி கடல் ரோந்து அதிகரிப்பு

சென்னை, ஜூன் 10 தமிழகத்தில் தேர்தலின் போது வெளியாரின் ஊடுருவலைத் தடுப்பதற்காக இராமநாதபுரம் மாவட்டம், கடற்பகுதியில் ரோந்தும் பணியை கடற்படை, விமானப்படை மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகியன இணைந்து மேற்கொள்ளும்.

இப்படி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆதிசேஷையா நேற்றுச் சொன்னார். [இ-எ]

# வர்த்தக ஊழியர்களுக்கு சம்பளம் ரூபா 2 ஆயிரம்!

யாழ்ப்பாணம், ஜூன் 10 வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் — ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்த— ஊழியர்களுக்கு ஆகக்குறைந்தது, இரண்டாயிரம் ரூபா சம்பளம் வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

வர்த்தக ஊழியர் சங்கத்துக்கும், வர்த்தகர்கள் சங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இந்த இணக்கம் காணப்பட்டதாக வர்த்தகச் சங்கச் செயலாளர் திரு. சி நமசிவாயம் தெரிவித்தார்.

இந்த ஊழியர்களுக்கு சேமலாப நிதி செலுத்தவும் இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். [உ-3]

## அ. தி. மு. க கொடிக்கு தடை

சென்னை, ஜூன் 10 அ. தி. மு. க. வின் கொடியை திருநாவுக்கரசு தலைமையிலான போட்டி அ. தி. மு. க. அணி தேர்தலில் பயன்படுத்துவதற்கு இடைக்காலத் தடை விதிக்கும் உத்தரவு ஒன்றை சென்னை மாவட்டச் சிவில் நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்தது. [இ-எ]

## அடையாளம் தெரியாத சடலம்

தென்மராட்சி, ஜூன் 10 முகமாலை சடலைப்பிட்டி மயானத்தில் அடையாளம் தெரியாத — 60 வயது மதிக்கத்தக்க — வயோதிபர் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் காணப்பட்டது [உ-117]

# நன்றி நவிலல்

எமது குடும்பவிளக்காகத் திகழ்ந்த 05-05-91 இல் இறைவனடி சேர்ந்த திருமதி மரியமுத்து மார்சலீன் பிள்ளை அவர்களின் பேரிழப்பின் போது எம் ஆறாத் துயரில் நேரில் பங்கு கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், உதவிகள் பல புரிந்தும், ஆறுதல் அளித்தவர்களுக்கும், அன்னாரின் மறைவின் 31 ஆம் நாள் நினைவு தினத்தன்று நடைபெற்ற ஆத்ம சாந்தித் திருப்பலிகளிலும், எமது இல்லத்தில் நடைபெற்ற மதிய போசன விருந்திலும் கலந்து கொண்டவர்களுக்கும், மேலும் எம் இல்லத்திற்கு வருகை தந்தும் வைபவத்தைச் சிறப்பித்த அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

இவரின் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை. [17098]

# ஆங்கில உதவி ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

EXAMINATION FOR RECRUITMENT OF

## ENGLISH ASSISTANT TEACHERS

ஜூலை 91 இல் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான

## துரித பயிற்சி வகுப்புகள்

**ஆரம்பம்: 16 - 06 - 1991 9-00 a m.**

★ G.C.E. O/L, N.C.G.E பரீட்சைகளில் ஒரே தடவையில் ஆங்கிலம் உட்பட 8 பாடங்களில் திறமைச் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

★ வயதெல்லை 18 — 40

★ விண்ணப்ப முடிவுத் திகதி 14 - 06 - 991

விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்

1. இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
2. கட்டணம் ரூபா 150-00 [முழுப் பயிற்சிக்கும்]
3. பல அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை.

விவரங்களுக்கு: நேரில்

**ASTAN INSTITUTE,**
101 / 10, STANLEY ROAD, JAFFNA.
[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]
[இ-0039]

# 2 ஆம் கட்ட வாக்களிப்பு புதன்கிழமை

புதுடில்லி, ஜூன் 10 இந்திய பொதுத் தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்களிப்பு எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும்.

13 மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களில் உள்ள 118 நாடாளுமன்றத் தொகுதிகளில் வாக்களிப்பு இடம்பெறும். [இ-எ]

# ஆனையிறவில் நேற்றும் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், ஜூன் 10 ஆனையிறவு முகாம் சுற்றாடல் பகுதிகளில் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை கடும் விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

நேற்றுக் காலை 10 மணி முதல் 11 மணிவரையும் மீண்டும் நண்பகல் ஒரு மணிமுதல் 1.30 மணிவரையும் பொம்மர்கள் தாக்குதலை நடத்தின.

12 தடவைகள் குண்டுகள் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. [உ-3]

## பஞ்சாப்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] கொல்லப்பட்டுள்ளனர்

இதைத் தொடர்ந்து, பஞ்சாபில் தேர்தலை ஒத்தி வைப்பது குறித்து பிரதம தேர்தல் ஆணையாளர் திரு. ரி. என். சேஷன் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினார்.

## புலிகளுடன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆனால் விடுதலைப் புலிகளும் வேறு சில எதிர்க்கட்சிகளும் அனைத்துக் கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளாதிருப்பதால், அந்த மாநாட்டில் எடுக்கப்படும் முடிவை செயற்படுத்துவது கடினமான காரியமாக இருக்கும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. என்றும் அமைச்சர் மேலும் சொன்னார்.

கொழும்பில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இத்தகவல்களைத் தெரிவித்தார். (உ-எ)

## திருமலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] டன.

கல்லாற்றுப் பகுதியை வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலில் ஆறு படையினர் அந்த இடத்திலேயே உயிரிழக்க எஞ்சியோர் முகாமுக்குள் தப்பி ஓடினார்கள் எனறு தெரிவிக்கப்பட்டது.

புலிகளால் கைப்பற்றப் பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

★ ரி 56 -2 ரகத் துப்பாக்கி - 4

★ இவற்றுக்குரிய ரவைக் கூடுகள் - 12

★ ரி 81 ரகத் துப்பாக்கி - 2

★ இவற்றுக்குரிய ரவைக்கூடுகள் - 6

★ ரி 81 ரக ஷெல்கள் - 4

★ ஜி. ஆர். ரகக் குண்டுகள் - 5

★ நடுத்தர ரக ரவைகள் -360

[உ-8]

## பற்றரி தேவை

12 வோல்ட்ஸ் 90 அம்பியர் பற்றரி அவசரம் தேவை. நல்ல நிலையில் விற்பனைக்கு வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும்.

[illegible]

# அரசு - புலிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] மாவட்டங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்தனர். பொலிஸாரைச் சரணடையுமாறு கேட்டனர்.

இரண்டு மாவட்டங்களிலும் உள்ள எட்டுப் பொலிஸ் நிலையங்கள் புலிகள் வசமாகின; பொலிசார் சரணடைந்தனர்.

ஆனால் கஞுவாஞ்சிக்குடி, கல்முனைப் பொலிசார் சரணடைய மறுத்தனர். அருகில் உள்ள இராணுவத்தினரும் அவர்களும் சேர்ந்து புலிகளைத் தாக்கத் தொடங்கினர்.

11 - 6 - 90 இல் ஆரம்பமான அந்த மோதல் நான்கு நாட்களாக கடும் சண்டையாகத் தொடர்ந்தது.

இதனிடையில் 12 - 6 - 90 புதன்கிழமை அமைச்சர் ஹமீத் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்

யுத்த நிறுத்தத்துக்கு இருசாரும் இணங்கினர். 13 ஆம் திகதி நண்பகல் தொடக்கம் யுத்த நிறுத்தம் மேற்கொள்ள இணங்கப்பட்டது. அது குறித்து அறிவிக்கவும்பட்டது.

ஆனால் கிழக்கில் பல இடங்களிலும் யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெற்றன. ஒரு சாரார் மறுசாரார் யுத்த நிறுத்தத்தை மீறியதாகக் குற்றம் சாட்டினர்.

யுத்த நிறுத்தம் தொடரவில்லை. கிழக்கில் கஞுவாஞ்சிக்குடி, கல்லடா, கல்முனை, கிரான் ஆகிய இடங்களில் கடும் மோதல்கள் நடந்தன.

யுத்த நிறுத்தம் விசுபிசுத்தது. மீண்டும் யுத்த நிறுத்தம் கொண்டுவர முயற்சிக்கப்பட்டது.

அமைச்சர் ஹமீத் இரண்டு நாட்கள் அடுத்தடுத்து யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேசினார். இணக்கம் காணப்பட்டது. 16 - 6 - 90 மாலை, 6 மணி தொடக்கம் யுத்த நிறுத்தம் செய்ய இணங்கப்பட்டது. ஆனால் அது செயலில் கடைப்பிடிக்கப்படவில்லை. படையினர் யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களில் ஈடுபட்டனர். அதனை நிலை நிறுத்தும் வகையில் அரசு 18 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக யுத்தத்தைப் பிரகடனம் செய்தது.

கிழக்கில் பெரும் எண்ணிக்கையான பொலிஸார், படையினர் உயிரிழந்தனர் அதற்கு வஞ்சம் தீர்க்கும் விதத்தில் அப்பாவித் தமிழ் பொதுமக்கள் பலரையும் படையினர் கொன்றனர்.

கஞுவாஞ்சிக்குடி, கல்முனை மோதல்கள் தொடங்கி, இன்று பத்தாம் திகதியுடன் ஒரு வருடம் முடிகிறது.

யுத்தம் பலவித பரிமாணங்களை அடைந்து தொடர்ந்து கொண்டே இருக்கிறது. தமிழர்களுக்கு எதிரான உயிர் நாசமும், உடைமைச் சேதமும் தொடர்கின்றன......!

[உ]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 10 வலி வடக்கிலிருந்து இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வெளியேறிய மக்களின் நன்மை கருதி உருவாக்கப்பட்டுள்ள வலி - வடக்கு புனர்வாழ்வுக் கழகத்தின் கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் புதன் கிழமை மாலை 3 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

வலி-வடக்கைச் சேர்ந்த அரச நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள், சமய நிறுவனங்கள், பாடசாலைகள், தொழிற்சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை இக்கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. [இ-த]

## வந்தாறுமூலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மீண்டும் மாலையில் வீடுகளுக்குள் புகுந்த படையினர் ஐந்து தமிழ் மக்களை அடித்துக் கொன்றதாகவும் அப்பகுதி பொது மக்களை மேற்கோள்காட்டி ஏ.ஜ. என். எவ் செய்திகள் தெரிவித்தன. [உ-8]

## சர்வதேச...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] தங்கள் விஜயத்தை சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதிகள் குழு ஒத்தி வைத்தது'' ஆனால் அதற்கான காரணம் வெளியிடப்படவில்லை.

நேற்று வந்தாறுமூலைப் பகுதியில் அப்பாவித் தமிழர் ஏழுபேர் படையினரால் கட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றிய தகவல் கொழும்பில் நேற்று வெளியானது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சாவகச்சேரி---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] குணா புலிகளின் கொடியை ஏற்ற முல்லைத்தீவு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் முல்லைச் செல்வம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் செல்வராசா சிறப்புரையையும், முல்லை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் முல்லைச் செல்வம், கவிஞர் இரத்தினதுரை ஆகியோர் சிறப்புரைகளையும் நிகழ்த்தினர்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் அவர்களும் உரையாற்றினார்.

''போரும் வழி வெகு தூரமில்லை'' என்னும் இளைஞர் கருத்தரங்கும் வாத்திய பிருந்தாவும், மீசாலை கலை பண்பாட்டுக் கழகத்தின் திர்வு நாட்டிய நாடகமும் விழாவில் இடம் பெற்றன. [உ-117 15]

# மரண அறிவித்தல்

## பூரணம் வல்லிபுரம்

ஓய்வுபெற்ற நடேஸ்வராக்கல்லூரி ஆசிரியை திருமதி பூரணம் வல்லிபுரம் 9 - 6 - 91 அன்று காலமானார்.

இவர் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், சிவலிங்கநாதனின் [கட்டுறவு வைத்தியசாலை தெல்லிப்பளை] தாயாரும், சிவமணியின் [கட்டுறவு வைத்தியசாலை] மாமியாரும், இராசசிங்கா, முத்துப் பிள்ளை, மாணிக்கம், காலஞ்சென்ற ரத்தினம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று [10-6-91] பிற்பகல் 1 மணிக்கு விஜயகுலசேகரி, காங்கேசன்துறை வீதி, மல்லாகத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. சிவலிங்கநாதன்
[மகன்]

சிவசக்தி வாசா,
புனையிரதநிலைய வீதி,
மாவிட்டபுரம்.
[16987]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10 - 06 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org